IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS No**. 16/2022 **Date**: 16.07.2025

**PW**1 - மதன்

சாட்சி மீண்டும் முன்னிலையாததின் பேரில் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் வருமான வரி தாக்கல் செய்வதில்லை. நான் பிரதிவாதிக்கு கடனாக கொடுத்த தொகையை என் வீட்டில்தான் வைத்திருந்தேன். அந்த தொகை நான் சீட்டு ஏலம் எடுத்து வைத்திருந்தேன். சங்ககிரியை சேர்ந்த பிரவீன்குமார் என்பவர் நடத்திய ஏலச்சீட்டில் நான் சேர்ந்து சீட்டு போட்டு வந்தேன். பிரதிவாதியை எனக்கு 4 வருடங்களாக தெரியும். நான் நடத்தி வரும் ஓட்டல் கடைக்காக பிரதிவாதியிடம் நிலக்கடலை வழக்கமாக வாங்குவதன் மூலம் அவர் எனக்கு பழக்கம். அவரை எனக்கு யாரும் அறிமுகப்படுத்தவில்லை, எனக்கே நேரடியாக பழக்கம். பிரதிவாதியே நேரடியாக என் கடையில் நிலக்கடலையை கொண்டு வந்து கொடுத்துவிட்டு செல்வார், அவர் வரவிட்டால் நான் வாங்கி செல்வேன். வா.சா.ஆ.1 தேதிக்கும் ஒரு மாதத்திற்கு முன்பு பிரதிவாதி கடன் கேட்டார். நான் ரூ.500/- நோட்டுகளாக 12 கட்டுகள் கொடுத்தேன். பிரதிவாதி எனக்கு வட்டி செலுத்தவில்லை என்ற விபரத்தை நான் சாட்சிகள் இருவரிடமும் சொன்னேனா என்றால், வழக்கு தாக்கல் செய்த பின்புதான் சொன்னேன். பிரதிவாதி எனக்கு வட்டி செலுத்தியதில்லை. பிரதிவாதி எனக்கு மாதம் ரூ.9000/- வட்டி செலுத்தவேண்டும். என் வீட்டில் வைத்து கடன் கொடுத்தேன். அப்போது செந்தில்குமார், துரைசாமி, ஜெகதீசன் ஆகியோர் இருந்தார்கள். துரைசாமி, செந்தில்குமாரை எனக்கு தெரியாது. மேற்படி மூவரும் சேர்ந்துதான் என் வீட்டிற்கு வந்தார்கள். வா.சா.ஆ.1 ல் துரைசாமி முதலில் கையெழுத்து செய்தார். பின்பு செந்தில்குமாரும், ஜெகதீசனும் கையெழுத்து செய்தார்கள். ஜெகதீசன் முதலில் கையெழுத்து செய்துவிட்டு பின்பு ரேகை வைத்தார். பணத்தை ஜெகதீசன் மட்டும் எண்ணிப் பார்த்தார். எனக்கு கல்லபாளையம் மாது என்பவரை தெரியாது. மைலேரிப்பட்டி கிருஷ்ணன் என்பவரையும் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 எழுதியபோது நேரம் காலை 8.00 மணி. நானும் பிரதிவாதியும் கல்லபாளையம் மாதுவிடம் ஏலச்சீட்டு போட்டு வந்தோம் என்றால், சரியல்ல. அந்த மாது என்பவர்தான் என் பெயரில் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல.

பிரதிவாதிக்கு என்னை யாரென்றே தெரியாது என்றாலும், என்னிடம் அவர் கடன் வாங்கவில்லை என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.1 க்கு பிரதிவாதிதான் வாசகம் சொன்னார். ஜெகதீசன்தான் புரோநோட் வாங்கி வந்தார். மாது என்பவர் பிரதிவாதிக்கு கிருஷ்ணன் என்பவர் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு அந்த கிருஷ்ணன் பிரதிவாதியிடம் அலைபேசியில் பேசியபோது அதை பிரதிவாதி பதிவு செய்து கொண்டுவிட்டதால், என் பெயரில் இந்த தாவாவை மாது தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. மாது என்பவர் ஏலச்சீட்டு நடத்த உரிமை பெற்றுள்ளாரா என்றால், அவரை யாரென்றே எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் சாட்சி கையொப்பம் செய்தவர்களை கடன் கொடுக்கும்போதுதான் எனக்கு தெரியும். சாட்சிகள் இருவரும் என் வீட்டிற்கு இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள், தனித்தனி வாகனத்தில் வந்தார்கள். மாதுவும், நானும் சாட்சிகள் உதவியுடன் வா.சா.ஆ.1 ஐ பொய்யாக தயார் செய்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. பிரதிவாதி நிலக்கடலை வியாபாரம் செய்கிறார்.

ஒப்பம்/- மதன்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.